**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 127 / 2022**

**வா.சா.3 – கருப்பையா** **25.07.2025**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான்தான் இருளப்பன் மகன் கருப்பையா என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆனந்தவள்ளி சொல்லிதான் இந்த வழக்கு பற்றி இந்த சொத்து பற்றியும் எனக்கு தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் மேற்படி நடேசன் இறந்த பிறகு மேற்படி நடேசனின் வாரிசுகளிடமிருந்து ஆனந்தவள்ளி கிரையம் பெற்று ஆனந்தவள்ளி பெயருக்கு புல எண் 111.⁄.2ஏ என உட்பிரிவு செய்யப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் யார் பெயரில் இருந்து யார் பெயருக்கு பட்டா மாறியது என்று எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்திற்கு நான் தான் விபரம் கூறினேன். நான் நிரூபண வாக்குமூலத்திற்கு விபரம் கூறவில்லை என்பதால் தான் எனக்கு தாவா சொத்தின் சர்வே எண் தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் சீனிமடை கிராமத்தில் வசித்துவருகிறேன். தாவா சொத்து தீர்த்தான்பேட்டையில் உள்ளது என்றால் சரிதான். ஆனந்தவள்ளி எந்த தேதியில் கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. ஆனந்தவள்ளி யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் நான்குமால் எனக்கு தெரியாது. இந்த வழக்கை பற்றியும் தாவா சொத்தை பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது ஆனந்தவள்ளி கேட்டுக்கொண்டதற்கிணங்க

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நடேசனுக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமமும் இல்லை என்றால் சரியல்ல.

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

தாவா சொத்து யாருடைய பெயரில் உள்ளது என்றால் ஆனந்தவள்ளி பெயரில் உள்ளது. வாதி இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனந்தவள்ளி எனக்கு உறவினர் இல்லை பழக்கமானவர். தாவா சொத்து சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை